வாழ்க திருக்குறள் ! வளர்க அறம் ! அறமே வாழ்க்கை !


திருக்குறள் கி. கணேசன்
திருக்குறள் ஆய்வாளர்
99948 92756

Thirukkural K. Ganesan
*Thirukkural Researcher*
tuacademy1@gmail.com


பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன் - திருக்குறள் 996

# திருக்குறள் உலகம் கல்விச்சாலை

# THIRUKKURAL ULAGAM ACADEMY

For Students / Professionals / Entrepreneurs / Business Leaders / Teachers / Sport Personalities
மாணவர்கள் / செயல் வல்லுநர்கள் / தொழில் முனைவோர்கள் / வணிகத் தலைவர்கள் / ஆசிரியர்கள் / விளையாட்டு வீரர்கள்

## நோக்கம்


நமது தொன்மை அறநூலாகிய உலகப் பொதுமறையாம் "திருக்குறள்" பார்வையில் அறம் சார்ந்த வாழ்வியல் கல்வி (Virtue Based Life Education), உளவியல் மேலாண்மைக் கல்வி (Psychology Management Education), மனித வளம் மேம்பாட்டுக் கல்வி (Human Resources Management Education), பண்பாடு மற்றும் ஆளுமைத்திறன் மேம்பாட்டுக் கல்வி (Ethos and Personality Skill Development Education) , மேலாண்மைத்திறன் (Manageability Skill), நிர்வாகத்திறன் (Administrative Skill) போன்ற மேம்பாட்டுக் பயிலரங்கம் உள்ளூர் முதல் உலகம் வரை நேரடி மற்றும் இணையவழியில் **"திருக்குறள் உலகம் கல்விச்சாலை"** நடத்தி வருகின்றது என்பதை கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். தங்களது கல்வி நிலையங்களில், தொழிற்கூடங்களில் மற்றும் பொது தளங்களில் கீழ்க்கண்ட பல்வேறு பாடத்திட்டங்களில் பயிலரங்கம், கருத்தரங்கம் நடத்த அணுகவும்.

இணையவழி மற்றும் நேரடி வகுப்புகள்
LiveWebinar

பாடத்திட்டம்


YouTube thirukkural Ulagam
thirukkural Ulagam
thirukkural_ulagam


வாழ்க திருக்குறள் ! வளர்க அறம் ! அறமே வாழ்க்கை !



PSGR Krishnammal College for Women KCW

பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி
தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)

மற்றும்

திருக்குறள் உலகம் கல்விச்சாலை

இணைந்து வழங்கும்

திருக்குறள் பார்வையில்

"வாழ்வாங்கு வாழ... நெறிமுறைகளும், வழிமுறைகளும்"

# திருக்குறள் கருத்தரங்க மலர்





30.09.2024 திங்கள்கிழமை

இடம் : பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, பீளமேடு, கோவை - 4.

... 241
ச. இராஜலதா ... 244
ஆ.பி. ஜெபென்ஸிக் ... 247
கொழுமம் ஆதி ... 251
ர. காயத்திரி ... 254
க. இராஜா ... 257
இரா. புவனேஸ்வரி ... 260
த.ராதிகா லட்சுமி ... 263
இரா. விஷ்ணுப்பிரியா ... 266
கோ. ஆனந்தா ... 269
உ. கவியரசி ... 272
ச. பூர்ணிமா ... 275
ப. திருநாவுக்கரசு ... 278
ஜி. கிருஷ்ணராஜ் ... 282
இர. மணிமேகலை ... 285
அ. தமிழரசி ... 288
வ. ஜானகி பாலகிருஷ்ணன் ... 292
அ. ஜான்சிராணி

# வாழ்வாங்கு வாழ - திருக்குறள் உணர்த்தும் செயல்திட்ட முறைகள்

முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

முன்னுரை

திருக்குறள் ஒரு சுரங்கம் போன்றது. திருக்குறளில் அறவியல், பொருளியல், இன்பவியல், சட்டவியல், அரசியல், மெய்யியல், அறிவியல் எனப் பல கருத்துப் பெட்டகங்களைக் கொண்டுள்ளது. இதில் வாழ்க்கைக்குத் தேவையான செயல் திட்டமுறைகள் வள்ளுவத்தில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பது குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

திட்டமிடல்:

செயல் திட்ட முறையில் வாழ்வாங்கு வாழ, வாழ்வு உயர திட்டமிடல் என்பது முக்கியமான ஒன்றாகும். வெற்றிக்கான ஒரு சிறந்த முதலீடு ஆகும். வியாபாரத்திற்கும், குடும்பத்திற்கும், அலுவலகத்திற்கும் திட்டமிட்டு ஒரு பணியைச் செயலாற்றினால் அச்செயலில் வெற்றி பெறலாம். இல்லையெனில் தொழிலோ, வாழ்க்கையோ எதுவாயினும் நட்டத்தையோ அல்லது இழப்பையோ சந்திக்க நேரிடும். ஒரு செயலைச்செய்வதற்கு முன் அச்செயலுக்கான வேலையை எவ்வாறு செய்ய வேண்டும்? ஏன் செய்ய வேண்டும்? என ஆராய்வதோடு அதற்குத் துணையாக அமைபவர்களின் தன்மையையும் ஆராய்ந்து, அச்செயலின் மூலம் வருகின்ற பயனையும் ஆராய்ந்து செயல்பட வேண்டும்.இல்லையெனில் எடுத்த காரியம் முழுமையடையாது. இதனை,

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண் விடல்" (குறள்: 517)

என்று தெரிந்து வினையாடல் என்ற அதிகாரத்தில் வள்ளுவம் கூறுகின்றது.

"திட்டமில்லாதவனுடைய வாழ்க்கை கரையில்லாத ஆற்றைப்போல வீணாகும். காற்றாற்றில் வரும் வெள்ளத்தை,

அணை மூலம் தேக்கிப் பின்னால் உரிய வாய்க்கால்கள் மூலமாக பாசனத்திற்குப் பயன்படுத்தி நெல்லும், கரும்பும், வாழையும் விளைவிப்பதைப் போல நம்முள் இருக்கும் ஆற்றலைத் தேக்கி ஒருமுகப்படுத்தி முறையான திட்டத்தின் மூலமாக நமது இலட்சியத்தை அடைய முயற்சிக்க வேண்டும். இலட்சியம் என்ற அழகிய கோபுரத்திற்கு திட்டமிடுதல் அடித்தளமாகும்".

## விடாமுயற்சி

ஒருவன் திட்டமிட்ட செயல் விடாமுயற்சியால் முழுமை பெறுகின்றது. முயற்சி செய்யும்போது அவனது இலக்கு வெற்றி அடைகின்றது. முயன்று கொண்டே இருப்பது முயற்சியாகும். ஒருவனுக்கு ஊக்கத்தையும், தன்னம்பிக்கையையும், அளிப்பதாக முயற்சி அமைகின்றது. ஒரு காரியம் செவ்வனே நடைபெற வேண்டுமெனில் தளராத உள்ளமும், விடாமுயற்சியும் தேவை. உள்ளத்திலே அஞ்சி நடுங்கி கோழைகளாக வாழ்பவர்களுக்குப் பாதுகாப்பு அரண் என்பது எதுவுமே கிடையாது. ஒருவன் நிற்கவும், நடக்கவும், பேசவும் பயப்பட்டால் வாழ்வில் சாதனை புரியவே முடியாது. தன்முனைப்புடன் செயல்பட்டு வாழ்வில் வெற்றி பெற்றவர்கள் பலர் உள்ளனா?. கஜினி முகமது தொடர்ந்து 17 முறை படையெடுத்து வந்து தான் சோமநாதர் ஆலயத்தைக் கொள்ளையடித்தான். அவன் நோக்கம் தவறாக இருந்தாலும் விடாமுயற்சியே அவனுக்கு வெற்றியைத் தேடித் தந்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எந்த ஒரு செயலையும் தொடர்ந்து செய்யும்பொழுது தான் வெற்றி உறுதியாகின்றது. அதே சமயம் பாதியில் ஒரு செயலை விட்டுவிட்டால் அதற்கு எந்தப் பலனுமில்லை, பயனும் இல்லை தளராத முயற்சி ஒருவனுக்கு தன்னம்பிக்கையும்,, ஆற்றலையும் கொடுக்கின்றது. "இந்த உலகத்தில் இயலாமல் தோற்றவர்களை விட முயலாமல் தோற்றவர்களே அதிகம். முடிந்தவரை முயற்சிப்பதல்ல முயற்சி. எடுத்ததை முடிக்கும் வரை முயற்சிப்பதே முயற்சி. முடியாது என்று முடங்கிவிட்டால் முன்னேற்றம் நின்று போகும். முடியும் என்று துணிந்து எழுந்தால் எல்லையில்லாத ஆற்றல் நமக்குள் பிறப்பெடுக்கும். விரியாத சிறகுகள் பறக்க உதவாது. அதுபோல முயற்சிக்காத ஆற்றல் வெற்றியைத் தேடித் தராது" (முயன்று எழு முன்னேறு, ப.13) என்று சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்கள் முயற்சியின் சிறப்பை எடுத்துரைக்கின்றதையும் காணமுடிகின்றது. ஒரு செயல் தெய்வத்தால் ஆகாது என்ற முடிவுக்கு வந்த பின் தெய்வ

நம்பிக்கையுள்ளவன் அதை விதி என்று ஏற்றுக்கொள்வான் ஆனால் தெய்வத்தால் முடியாததையும் மனிதனால் செய்ய இயலும் என்ற உயர்ந்த நோக்கை,

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன்
மெய்வருத்தக் கூலி தரும்" (குறள் : 619)

எனத் திருக்குறள் கூறுகின்றது.

## பொறுப்பின்மையும், செயல்பின்னடைவும்:

நாம் ஒரு செயலைச் செய்து முடிக்க நினைத்தால் உடனே அச்செயலைச் செய்துவிட வேண்டும். இல்லையெனில் மனதில் சோம்பேறித்தனம் குடிகொண்டு விடும்.பின்பு ஒரு செயலைச் செய்யும்போது நாளை செய்யலாம், பிறகு பார்க்கலாம் என்று ஒரு வேலையைப் பல நாட்களுக்கு நீடித்தோம் எனில் அவ்வேலை குறிப்பிட்ட நேரத்தில்சரியாக நடைபெறாது. ஒரு செயலை மற்றவர்களிடம் ஒப்படைக்கும் பொழுது அவர் அவ்வேலையைச் சரியாகச் செய்து முடிப்பாரா என்று ஆலோசித்த பின்னரே ஒரு வேலையை அவரிடம் கொடுக்க வேண்டும். தன்னம்பிக்கையும், சுறுசுறுப்பும் இல்லாத சோம்பேறி யிடம் வேலையை ஒப்படைக்கும்போது அவ்வேலை சிதைவுற்று அழியும் ஒருவன் ஒரு தொழிலைச் செய்து முடிப்பதற்கு இவன் சரியானவனா என்பதை ஆராய்ந்து பார்த்த பின்னரே அவ்வேலையை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் இல்லையெனில் அவ்வேலை பல வருடங்கள் கடந்தாலும் நடக்காது என்பதை,

"வினைக்கு உரிமை நாடிய பின்றை அவனை
அதற்கு உரியனாகச் செயல்" (குறள், ப. 518)

எனக் குறிப்பிடுகின்றார் வள்ளுவர்.

## முடிவுரை

பொதுமைப் புது உலகம் பூத்துத் திகழ பொய்யா, மொழியால் தீட்டப்பட்ட புதுமைப் பொதுநூல் திருக்குறள் ஆகும். மனிதன் கற்றுக்கொள்ள வேண்டிய செய்திகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வாழ்க்கையில் முன்னேற செயல்திட்டத்தை வகுப்பது அவசியம். நாம் வாழ்வாங்கு வாழ இது காரணியாக அமைகின்றது. எண்ணம் போல் வாழ்க்கை என்பார்கள். அவ்வகையில் எண்ணம் சரிவர அமைய செயல்திட்டம் உறுதுணையாகின்றது என்பதை இக்கட்டுரையின் வழி அறியமுடிகின்றது.